அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை : 11/2019

எனது இலக்கம் : EST-3/DICIP/06/0275
பொது நிர்வாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
சுந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2019.05.06

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச் சட்டச் சபைகளின் தலைவர்கள்

**அரசாங்க நிறுவனங்களின் வளாகங்களினுள் வெற்றிலை, புகையிலை மற்றும் பாக்கு உற்பத்திகளைப் பயன்படுத்துவதையும் விற்பனை செய்வதையும் தடை செய்தல்**

அரசாங்க நிறுவனங்களினுள் புகைப்பிடிப்பது தொடர்பில் வெளியிடப்பட்ட 1999.03.18 ஆந் திகதிய அரசாங்க 08/99 ஆம் இலக்கச் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு மேலதிகமாக இது வெளி வெளியிடப்படுகின்றது.

02. 1982/33 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் ஊடாக 2016.09.01 ஆந் திகதி முதல் புகையிலை அடங்கிய பொருட்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் விற்பனைக்குச் சமர்ப்பித்தல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளமையினாலும் வாய்ப் புற்றுநோயை ஏற்படும் வாய்ப்பைக் குறைப்பதற்கான ஒரு நடவடிக்கையாகவும் வெற்றிலை, புகையிலை மற்றும் பாக்கு என்பவற்றின் அடிப்படையிலான உற்பத்திகள் தொடர்பில் பின்வரும் விதத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று 2019.03.12 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதன் அடிப்படையில்,

I. அனைத்து அரசாங்க நிறுவனங்களின் வளாகங்களினுள்ளும் வெற்றிலை, புகையிலை, பாக்கு என்பவற்றின் அடிப்படையிலான உற்பத்திகளைப் பயன்படுத்துவதும் விற்பனை செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளன.

II. அந்த நிறுவனங்களுக்குத் சொந்தமான உணவகங்களில் வெற்றிலை, புகையிலை, பாக்கு மற்றும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளை விற்பனை செய்வதை நிறுத்த வேண்டும்.

04. மேற்படி ஏற்பாடுகளுக்கு ஒத்திசைவாகச் செயற்படுவதற்கு அனைத்து அரசாங்க நிறுவனங்களினதும் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிர்வாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு